பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 22 (4—4—68) வியாழன் ✲ வெளியூர்: பங்குனி 23 (5—4—68) வெள்ளி [இதழ்: 244

## உலகப் புகழ்பெறும் 'முதல்வர்' அண்ணா!

### அமெரிக்கரல்லாதவருக்குக் கிடைக்கும் முதற் சிறப்பு

சென்னை, ஏப். 4—

அமெரிக்கா, மற்றும் உலக நாடுகட்குச் செல்லவிருக்கும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், அமெரிக்காவில் உள்ள 'யேல்' பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று அங்கு சிறப்புரையாற்றவிருப்பதும், அவ்வமயம் அப்பல்கலைக் கழகம் அண்ணா அவர்களுக்குச் சிறப்புப் பட்டம் வழங்கவிருப்பதும் தெரிந்ததே.

யேல் பல்கலைக் கழகத்தின் இத்தகைய பட்டத்தைப் பெறும் முதல் அமெரிக்கரல்லாத தலைவர் அறிஞர் அண்ணா அவர்களேயாவர்.

இதுவரையில் இப்பட்டத்தைப் பெற்ற அனைவரும், அமெரிக்காவைச் சேர்ந்த புகழ்பெற்ற தலைவர்களேயாவர்.

இதுவரையில் இந்தப் பட்டத்தைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:—

நியூயார்க் பழைய கவர்னர் ஆவரின் ஆரிமன்.

அடலாய் ஸ்டீவன்சன் (ஐ. நா. சபையில் அமெரிக்கத் தலைவராக இருந்தவர்.)

தற்போதைய அமெரிக்கத் துணைத் தலைவர் ஹம்ப்ரே.

செஸ்டர் பவுல்ஸ். (இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதுவர்.)

கோல்டுவாட்டர் (கடந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஜான்சனுடன் போட்டியிட்டுத் தோற்றவர்.)

அமெரிக்க நடிகரும் கவர்னருமான ரோனல்டு ரீகன்.

## 'அமைச்சர்கள் குப்பை கூட்டுபவர்கள்'

புதுடில்லி, ஏப். 3—

"'குப்பை கூட்டுபவர்' (Scavenger) என்ற சொல், பாராளுமன்றத்தில் பயன்படுத்தக்கூடியது தான்"

என்று, இன்று நாடாளுமன்ற மக்களவையில் துணை அவைத் தலைவர் காதில்கார் தீர்ப்பளித்தார்.

பாபுராவ் பட்டேல் என்ற உறுப்பினர் பேசும்போது, 'அமைச்சர்கள், அதிகார வர்க்கத்திற்குக் குப்பை கூட்டுபவர்களாகச் செயல்படுகின்றனர்' என்று குறிப்பிட்டபோது, இரந்தீர் சிங் என்ற வேறொரு உறுப்பினர், 'அச்சொல்லைப் பயன்படுத்தலாமா' என்று கேட்டபோதே, இப்படிக் கூறியிருக்கிறார், துணை அவைத் தலைவர்.

## வியட்நாமில் போர்நிறுத்தம்

### ஹனுய் ஆலோசிக்கும்

வாஷிங்டன், ஏப். 4—

வியட்நாமில் குண்டு வீச்சை நிறுத்துவது என்று அமெரிக்க அதிபர் ஜான்சன் அறிவித்ததை ஒட்டி, போரை நிறுத்துவதுபற்றி ஆலோசிக்க அமெரிக்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க வட வியட்நாம் தயாராயிருப்பதாக ஹனுய் வானொலி அறிவித்துள்ளது.

## வர்த்தக ஒலிபரப்பு சென்னையிலும் துவங்கும்

புதுடில்லி, ஏப் 4—

"சென்னையில் வெகு விரைவில் வர்த்தக ஒலிபரப்பினை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது"

என, நாடாளுமன்றத் தி. மு. க. உறுப்பினர் திரு சோமசுந்தரம் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் கே.கே. ஷா தெரிவித்தார்.

## ஆங்கில ஆசிரியர்கள் நிலை என்ன?

### மாற்று வேலை தேடித்தர உ.பி. மாநில அரசு முன்வரவில்லை?

#### ஆளுநரிடம் 2,500 பேர் முறையீடு

லக்னோ, ஏப். 3—

உத்தரப் பிரதேச உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 2,500 ஆங்கில ஆசிரியர்கள், தங்களது வேலையை இழக்க நேரிடுமோ என அஞ்சிக்கொண்டிருக்கின்றனர்.

முன்னைய அரசின் ஆங்கில எதிர்ப்புக் கொள்கையை மாற்றி தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்தாலன்றி தங்களுக்குப் பரிகாரம் கிடைக்காது என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

இந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகள் கவர்னரைச் சந்தித்து முறையிட்டிருக்கின்றனர்.

ஆசிரியர்கள் கூறியிருப்பதாவது:—

"சென்ற ஆண்டு வரையில் பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் ஆங்கிலம் ஒரு பாடமாக இருந்தது. இந்த ஆண்டு முதல் ஆங்கிலத்தை ஒரு பாடமாக விரும்பி எடுத்து மாணவர்கள் பரீட்சை எழுதினால் அதில் கிடைக்கப் பெறும் மதிப்பெண்களை மொத்த மதிப்பெண்களில் சேர்த்துக்கொள்வதில்லை என முடிவு செய்திருக்கின்றனர். இதற்குப் பதிலாகத் தனித் திறமைச் சான்றிதழ் அளிக்கப்படுகிறது.

"இது, மாணவ - மாணவியரின் ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைக் குறைக்கச்செய்கிறது."

## தென்காசித் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தல்

### கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

பொதுத் தேர்தல் இடைத் தேர்தல் ஆகியவைகளில் ஈடுபட்ட தி. மு. கழகம், தனது வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அதற்கேற்ப கழகத் தோழர்களும், கழக அமைப்புகளும் ஆதரவு திரட்டுவதிலும் மேற்கொண்டுள்ள கண்ணியமான—ஒழுங்கு முறையான செயல் தன்மைகளை நாடு நன்கு அறிந்திருக்கிறது.

இந்த அடிப்படையில், 1968 சூலைத் திங்களில் நடைபெறவிருக்கும் தென்காசித் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தலில், கழக வேட்பாளர் யார் என்பதைத் தலைமைக் கழகம் உரிய நேரத்தில், முறைப்படி அறிவிக்க இருக்கிறது.

இந்நிலையில் ஒருவர், கழகத் தோழர்களிடையே ஆதரவு கோருவதாகக் கூறிக்கொண்டு துண்டுத் தாள்களை வெளியிட்டுக் கழகத்தின் கட்டுப்பாட்டினையும், கண்ணியத்தையும், ஒற்றுமையையும் சீர்குலையச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, அவர் கழக உறுப்பினராயிருப்பின் முறைப்படி ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டவராகிறார். அவர் கழக உறுப்பினராக இல்லாதிருப்பின் தென்காசித் தொகுதியிலுள்ள கழக அமைப்புகளும், கழகத்தோழர்களும், இதுபோன்ற முறை தவறிய செயல்களைப் பொருட்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்வதுடன், தென்காசி சட்டமன்ற இடைத் தேர்தலில், கழக வேட்பாளர் யார் என்பதைத் தலைமைக் கழகம், அதிகாரபூர்வமாக அறிவிக்கும் என்பதையும் மீண்டும் இதன் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம், தி. மு. க.

## பலர் உயிரைக் காத்த முடவர்

### அருஞ்செயலைப் பாராட்டிப் பரிசு

கோழிக்கோடு, ஏப். 4—

ஆபத்து நேரத்தில் துணிச்சலாக நடந்துகொண்டு பலர் உயிரைக் காப்பாற்றிய இப்ராகிம் என்ற ஒருவருக்கு கோழிக்கோடு சுழற்குழு, (ரோட்டரி கிளப்) ரூ. 200 பரிசு அளித்திருக்கிறது.

இப்ராகிம், ஒரு கால் ஊனமடைந்தவராவார்.

சென்ற திங்களன்று காக்கஞ்சேரி என்னுமிடத்தில் ஏற்பட்ட பஸ் விபத்தின்போது, இப்ராகிம், அருகிலுள்ள கடை ஒன்றில் அமர்ந்திருந்தார்; ஏற்பட்ட பஸ் விபத்தைக் கண்டதும் அவர், உடனே கோடரி ஒன்றை எடுத்து பஸ் கூண்டை பிளந்து பயணிகள் பலர் வெளிவருவதற்கு உதவி செய்திருக்கிறார்.

சந்தர்ப்பத்திற்கேற்ற அவரது புத்திசாலித்தனம், பலரின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது.

இதற்காகத்தான் அவருக்குப் பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்விபத்தில் இருவர் மரணமடைந்து, பலர் காயமடைந்திருக்கின்றனர்.

சில நாட்களுக்குமுன் ஏற்பட்ட விபத்து ஒன்றில் அவர் தமது காலை இழந்துவிட்டார்.

## மத்திய அரசு நிறுவனம் காட்டும் நட்டக் கணக்கு

### உணவுத் தானிய வர்த்தகத்தில் ரூ. 235 கோடி இழப்பு

புதுடில்லி, ஏப். 4—

கடந்த 24 ஆண்டுகளில் உணவு வர்த்தகக் கார்ப்பரேஷனில் ரூ. 235.9 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 1965—66-ம் ஆண்டில் ரூ. 56 கோடி இலாபம் ஏற்பட்டிருந்த இந்நிறுவனத்தில் 1966—67-ம் ஆண்டில் மட்டும் ரூ. 93.28 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தணிக்கைக் குழு அறிக்கையில் மேற்கண்ட தகவல்கள் தரப்பட்டுள்ளன.

1966—67-ல் மட்டும் இந்நிறுவனம் ரூ. 589.68 கோடிக்கு உணவுத் தானியங்களை வாங்கியிருக்கிறது. இதில் விற்பனையாகியிருக்கும் உணவுத் தானியங்களின் மொத்த மதிப்பு ரூ 491 34 கோடி ஆகும்.

"வாங்கிய இயந்திரங்களைப் பயன்படுத்தாதது—வேலைகளைச் சரிவர நிறைவேற்றாதது—பாக்கிகளை வசூல் செய்யாதது—நிறைவேற்றப்பட்ட நிதியைவிட அதிகப்படியாகச் செலவிடப்பட்டது ஆகியவை இந்நிறுவனத்திற்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்திற்குக் காரணங்களாகும்" என்று தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது.

## ரூ. 13,830 கோடி!

### இந்தியா பட்டுள்ள கடன்

புதுடில்லி, ஏப். 4—

1966—67 நிதி ஆண்டு இறுதியில், மத்திய அரசின் மொத்தக் கடன் ரூ. 13,830 கோடியாக இருக்கிறது.

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதன் விளைவாக 1966-67-ல் இந்தியாவின் கடன் பொறுப்பு ரூ. 1,317 கோடி அதிகரித்தது.

1966 மார்ச் திங்களில் நாட்டின் அந்நியக் கடன் ரூ. 2,591 கோடியாக இருந்தது; 1967 மார்ச் 31-ல் அது, ரூ. 4,633 கோடியாகிவிட்டது.

"உணவு இறக்குமதிக் கணக்கில் ரூ. 25 கோடி மிச்சமாகும்" என, வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டது; ஆனால், இறக்குமதி அதிகரிக்கப்பட்டதாலும், ரூபாய் மதிப்புக் குறைப்பால் விலைகள் உயர்ந்ததாலும், பொதுவாக விலை அதிகரிப்பாலும் ரூ. 127 கோடி அதிகம் செலவிட வேண்டியதாகிவிட்டது.

# ஏழை மக்கள் வேதனையுற கழக அரசு இடந் தராது!

## வருவாய் அல்ல முக்கியம்—நாட்டின் நலனே அவசியம்

## மதுவிலக்குக் கொள்கையில் அண்ணாவின் அசையாத நம்பிக்கை

### கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் கருத்துரை

“காந்தியாருக்குக் கண் போன்ற மதுவிலக்குக் கொள்கையைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டனர் காங்கிரசார்! மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டுதான் இப்போது அரசு நடத்திவருகிறார்கள்! காங்கிரசுக் கட்சி ஆளும் மைசூர் மாநிலம் முழுவதிலும் கள்ளுக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன! காந்திக்கு உயிருக்கு உயிராக இருந்த அந்தக் கொள்கையை—‘கள் குடிக்கக் கூடாது’ என்பதற்காக அப்போது மறியல் போராட்டம் நடத்தினார்களே—அதற்காகப் பல கஷ்டநஷ்டங்களை ஏற்றார்களே—வெஞ்சிறையில் அடைக்கப்பட்டார்களே—அந்தக் கொள்கையை இப்போது அதே காங்கிரசுக்காரர்கள் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள்! சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் கதர் கட்டிய நிஜலிங்கப்பாவும் பிரும்மானந்த ரெட்டியும் திறந்துள்ளனர்! அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு அவர்கள் ஆளுகிறார்கள்!

“ஆனால் தமிழ்நாட்டிலோ, அறிஞர் அண்ணா ஆட்சியில் அந்த வருவாயை எதிர்பார்க்கவில்லை! இங்கு படி அரிசித் திட்டத்துக்கு ரூ. 7¼ கோடி தேவைப்படுகிறது; என்றாலும் ஏதும் புது வரி போடவில்லை; கள்ளுக் கடைகளைத் திறக்கவில்லை; ஆனால் கள்ளுக் கடைகளைத் திறந்து காங்கிரசுக் கட்சியினர் ஆட்சி செலுத்துகிறார்கள்!

“இங்குள்ள காங்கிரசுக்காரர்கள், ‘கள்ளுக் கடைகளைத் திறந்தால் கூடுதலாக ரூ. 16 கோடி கிடைக்கும்; அதைக் கொண்டுவரும் திட்டமுண்டா?’ என்று கேட்கிறார்கள். யார் கேட்பது—கதர் கட்டியவர்கள் கேட்கிறார்கள்! உடனே அறிஞர் அண்ணா அவர்கள்—‘நான் கள்ளுக் கடைகளைத் திறக்கும் விஷயத்தில் இலாப நட்டங்களைப் பார்க்கமாட்டேன்; கொள்கை அளவிலேயே அது கூடாது என்கிறேன்’ எனக் கூறிவிட்டார்!

“மதுவிலக்கை இங்கு எடுத்துவிட்டால், ரூ. 16 கோடி வரும்—அதற்கு மேலும் வரும்; ‘வராது’ என்று சொல்ல முடியாது! அரசுக்கு எவ்வளவு பணம் கிடைக்கும்; அதை ஏலம் எடுப்பவனுக்கு எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

“நமக்குத் தெரியாதா—‘இதனால் எந்தக் குடும்பங்கள் பாதிக்கப்படும்’ என்பது! கள்ளுக் கடைகளை ஏலம் எடுத்ததால், எவ்வளவு பேர் பணக்காரர்கள் ஆனார்கள் என்பதும் நமக்குத் தெரியும்! ஏலம் எடுப்பவர்களுக்குக் குறைந்தது ரூ. 30 கோடி கிடைக்காமலா அரசுக்கு ரூ. 16 கோடி கிடைக்கும்? தண்ணீரைச் சற்று அதிகமாகக் கலந்தால் மேற்கொண்டு ரூ. 5 கோடிகூட அவர்களுக்குக் கிடைக்கும்!

“ஆக, இந்த ரூ. 50 கோடியும் கள்ளுக் கடைகளைத் திறந்தால் கிடைக்கும். இந்தப் பணம் யார் வீட்டுப் பணம்? எந்த வீட்டிலிருந்து இந்தப் பணம் வரும்? பணக்காரர்கள் வீட்டிலிருந்தா வரும்—கிடையாது! மாதம் ரூ. 90 சம்பாதிக்கிறானே—அவன், ரூ. 80-ஐ கள்ளுக் கடைக்குக் கொடுத்துவிட்டு, மனைவியிடம் ரூ. 10-ஐ மட்டும் தரும்போது அதிகம் கேட்டால் இரண்டு உதை கொடுத்து செல்வானே—அவன் தரும் பணம் இது! இது ஊருக்கு ஊர்—குடிசைக்குக் குடிசை நடக்கவில்லையா?

“பெரிய பணக்காரர்கள், கார் சொந்தக்காரர்களா கள்ளுக் கடைகளுக்குச் செல்வார்கள்? ஏழை, 25 நாட்கள் கள்ளுக் கடையிலே இருப்பான்—5 நாட்களுக்குத்தான் வீட்டில் இருப்பான்! பெண்டு பிள்ளைகளைக்கூட மறந்துவிடுவான்! மற்றவர்கள் குறை சொல்லக்கூடிய நிலையில்தான் அவன் இருப்பான்!

“அமெரிக்கா போன்ற நாடுகளில் குடிப்பதை ஒப்புக்கொள்ளலாம்; அங்கு தனி மனிதன் சராசரி வருமானம் ரூ. 16,500; ஆனால் நம் நாட்டில் சராசரி வருமானம் ரூ. 325; மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றிய பிறகும்கூட இந்த நிலை! இப்போது கிடைத்துள்ள விவரப்படி, சராசரி வருமானம் ரூ. 65 ஆகக் குறைந்திருக்கிறது! இந்த ஏழ்மை நிலையில், குடிப்பதை நாம் தாங்கமுடியுமா?

“அமெரிக்காவில் உயர்ந்த ரக மது 2 அவுன்சு எடுத்துக் கொண்டு அதை இரண்டு மணி நேரம் குடிப்பார்கள்! மது அருந்தினாலும் நிதானமிழக்காமல் விமானம் ஓட்டும் வேலை வரையில் ஒழுங்காகச் செய்கிறார்கள்!

“ஆனால் இங்குள்ளவர்கள், இரண்டு அவுன்சா குடிப்பார்கள்? பீப்பாயைச் சாய்த்தால் அந்த பீப்பாய் தானாகத்தான் கீழே விழ வேண்டுமே திவிர, இவர்களாகவே தலையைத் தூக்க மாட்டார்களே!

“ஆகவே, மதுவை இந்த ஏழை நாடு தாங்காது. இந்த அநியாயச் செலவைத் தாங்காது. அந்தப் பழக்கத்திலிருந்து ஏழைகள் மீளுவார்களா?

“ஆகவேதான் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்—‘இதில் இலாப நட்டக் கணக்கு பார்க்கமாட்டேன்; பணம் அல்ல முக்கியம்—நாட்டின் நலம்தான் முக்கியம்’ என்று! மதுவின் மூலம் ரூ. 16 கோடி கிடைத்தால் நல்ல சிமெண்டு ரோடு போடலாம்; தார் ரோடு போடலாம்; ஆனால் அநேக ஏழைக் குடும்பங்களில் அழுகுரல் கேட்கும்; ஏழைக் குழந்தைகள் கண்ணீர் வடிக்கும்; ஏழைகள் நிம்மதியாக வாழ முடியாது! ஆகவேதான் அறிஞர் அண்ணா அவர்கள், மதுவிலக்குக் கொள்கையில் அசையாத நம்பிக்கை வைத்து மதுவிலக்குத் திட்டத்தைத் தீவிரப்படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள்!”

இவ்வாறு, கல்வி—தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மார்ச் 24-ம் நாளன்று தஞ்சை-திலகர் திடலில்—தோழர் பெத்தண்ணன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிய விளக்கினார். அவர் ஆற்றிய உரையின் சில பகுதிகள் வருமாறு:—

## தமிழக அரசின் 17- பரிந்துரைகள்

### மூன்றுக்கு மட்டுமே மத்திய அரசு ஒப்புதல்

புதுடில்லி, ஏப் 3—

“இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 17 புதிய இரயில்வேத் தொடர்களை அமுல்படுத்த வேண்டும் எனத் தமிழக அரசினரால் கோரிக்கை எழுப்பப் பட்டது”

என மத்திய இரயில்வேத் துறை அமைச்சர் பூனாச்சா, மக்களவையில், கழக உறுப்பினர் தெய்வீகன் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

“மாநில அரசு பரிந்துரை வழங்கிய இரயில்வேத் தொடர்களில் மூன்று திட்டங்களை அமுல் படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது; பணம் பற்றாக் குறை காரணமாக செங்கற்பட்டு—சின்ன சேலம் தொடரை இரயில்வேயின் இரண்டாவது திட்ட காலத்தில் எடுத்துக் கொள்ள முடியவில்லை”

என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

## அண்மையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி நீதி விசாரணை

### பொதுமக்களுக்கு வேண்டுகோள்

சென்னை, ஏப். 4—

தமிழக அரசு பஸ் போக்குவரத்துத் துறையில் சில ஊழியர்களுக்கும்—மாணவர்களுக்குமிடையே சென்னை நகரில் சில பகுதிகளில் 1968 மார்ச் 25, 26-ஆம் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரிக்க மாவட்ட செஷன்சு நீதிபதி திரு. பி. எஸ். சோமசுந்தரம், நீதிவிசாரணைக் குழு நீதிபதியாகத் தமிழக அரசினரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த விசாரணை, இந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், அவைகள் நடப்பதற்கு ஏதுவான காரணங்கள், சூழ்நிலைகள் பற்றியும் விசாரிக்கும்; பகிரங்க விசாரணையாக நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகள் பற்றி நேரடியாகத் தெரிந்திருந்து சாட்சியமளிக்க விரும்புவோர் அனைவரும் சாட்சியமளிக்க முன்வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சாட்சியமளிக்க விரும்புபவர்கள், கீழ்க்காணும் விவரங்களை, ‘பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி, எண் 2, அரசாங்க மாளிகைத் தோட்டம், சென்னை-2’ என்ற முகவரியில் உள்ள விசாரணைக் கமிஷன் அலுவலகத்துக்கு, 15–4–68-க்குள் எழுத்து மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. பெயர்
2. முகவரி
3. தொழில் அல்லது பதவி
4. எந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிய சாட்சியம் என்ற விவரம்.

விசாரணை ஏப்ரல் 22-ம் நாள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் தொடங்கி, முடியும் வரை தொடர்ந்து நடைபெறும்.

இக்குழுவின் முன்பு உண்மையான சாட்சியமளிப்பவர்களுக்கு சிவில்—கிரிமினல் நடவடிக்கைகளிலிருந்து மேலே குறிப்பிட்ட சட்டத்தின் 6-வது பிரிவில் கண்டுள்ளபடி பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கழகச் சாதனைகளை ஒப்பிட்டுப் பார்க்கட்டுமே!

“கடந்த பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் சிறப்பான வெற்றி பெற்றுள்ளது.

இருபதாண்டுக்காலமாக மத்தியிலும், மாநிலங்களிலும் கோலோச்சிய காங்கிரசு—80 ஆண்டுகளாக வளர்ந்து வந்த கட்சி—இம்மாநிலத்தின் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளில் பெரும்பாலானவைகளை தன்கையில் வைத்திருந்த கட்சி—அத்தகைய பெரிய காங்கிரசு கட்சியின் ஆட்சியை வீழ்த்தினோம்!

இந்தியா முழுவதிலும் ஆட்சி நடத்திய கட்சி—எந்தத் திட்டம் போட்டாலும் உடனுக்குடன் நடத்தக்கூடிய வலிமை மிக்க கட்சி—ஜவகர்லால் நேருவை தலைமையமைச்சராகக் கொண்டிருந்த கட்சி—பல மாநிலங்களில் 1967-ல் நடந்த தேர்தலில் தோற்றுவிட்டது!

இந்த வீழ்ச்சிக்குக் காரணம், அவர்களுடைய பேச்சும் நடவடிக்கையும் ஆகும்!

அவர்களுடைய எண்ணங்களும், திட்டமும், அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்திய விதமும் தான் ஆகும்!

அவர்களுடைய பேச்சுக்கள், ஆட்சியையே மாற்றக் கூடிய அளவுக்கு அமைந்தன!

அப்போதே அவர்கள் பேச்சை வெறுத்த மக்கள், இப்போது அவர்கள் பேசுவதையா கேட்கப்போகிறார்கள்?

‘கழகத்துக்குக் கொள்கை கிடையாது’ என்று அப்போது பேசினார்கள் — மக்கள் அந்தப் பேச்சை மதித்தார்களா? இப்போதா அவர்கள் பேச்சை மதிக்கப் போகிறார்கள்?

கதர்கட்டிய நிஜலிங்கப்பா ஆட்சி நடத்தும் மைசூர் மாநிலமும், கதர்கட்டிய பிருமானந்த ரெட்டி ஆட்சி நடத்தும் ஆந்திரமும் கடந்த ஓராண்டில் நடத்திக் காட்டிய சாதனைகளையும், தமிழக அரசு கடந்த ஓராண்டில் செய்த சாதனைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கட்டுமே—அப்போது புரியும் தி. மு. க. ஆட்சியின் சிறப்பு!

## சட்டம்—அமைதி சீராக இயங்கிய மாநிலம் இதுதான்!

இந்த அரசு, கடந்த மார்ச் 6-ம் நாள் பொறுப்பு ஏற்றது; ஆனால் காங்கிரசுக்காரர்கள், 15-ந் தேதியே, ‘சட்டம்—ஒழுங்கு இல்லை’ என்று சொன்னார்கள்; சிறுசிறு தகராறுகளை வைத்துக்கொண்டு என்னென்ன வெல்லாமோ பேசினார்கள்!

மற்ற நாடுகளில் என்ன நடக்கிறது? இரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் என்ன நடக்கிறது?

நான் இங்கிலாந்து சென்றிருந்தபோது, தேர்தல் பிரச்சாரம் நடந்துகொண்டிருந்தது; ‘வில்சன் தாக்கப்பட்டார்’ என்ற செய்தியும் எனக்குக் கிடைத்தது.

நமது நாட்டில் ஒரிசா மாநிலத்தில் காங்கிரசு ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இந்த நாட்டின் தலைமையமைச்சர்—ஒரு பெண்மணி—பலத்த போலீசுக் காவலுடன் சென்றாரே—மூக்கு உடைபடவில்லையா? போலீசால் தடுக்க முடிந்ததா?

‘சட்டம்—அமைதி குலைந்துவிட்டது’ என்றால் என்ன பொருள்? நாட்டில் அமளி ஏற்பட்டு போலீசுத் தலையிட்டு அடக்க முடியாவிட்டால் — இராணுவம் வரவழைக்கப்பட்டு அதுவும் முடியாவிட்டால்—வியட்நாம் போன்று அந்நிய இராணுவ உதவி கோரப்படும் நிலை இருந்தால்தான் சட்டம்—அமைதி குலைந்துவிட்டதாகப் பொருள்!

நமது மாநிலத்தில் நடப்பதென்ன?—அதுவா நடந்தது?

தமிழகத்தில் சட்டம்—அமைதி காப்பாற்றப்பட்ட அளவுக்கு எந்த மாநிலத்தில் சட்டம்—அமைதி காப்பாற்றப்பட்டது?

முன்பு பக்தவத்சலம் ஆட்சியில், பொள்ளாச்சியில் இராணுவம் அழைக்கப்பட்டதே! பக்தவத்சலம் கையாண்டமுறை என்ன? அறிஞர் அண்ணா கையாண்ட முறை என்ன?

கடந்த ஆண்டில் ஆந்திரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு 7 பேர் பலியானார்கள்; மைசூரில் 3 பேர் பலியானார்கள். இதே மாநிலத்தில் 1965-ல் 50பேருக்கு மேல் இறக்கவில்லையா?

தமிழகத்தில் 36,300 ஆரம்பப் பள்ளிகள் — 2,500-க்கு மேல் உயர்நிலைப் பள்ளிகள்—116 கல்லூரிகள் இருக்கின்றன; அண்மையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஒரு துப்பாக்கிச் சூடும் நடைபெறவில்லையே!

ஆனால், டில்லியில் பட்டப் பகலில், அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் வீட்டில் நடந்ததென்ன? தீவைப்பு—கொலை முயற்சி நடைபெறவில்லையா? கொல்லைப்புறமாகத் தோழர் காமராசர் வெளியேறிச் செல்ல வேண்டிய அளவுக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறவில்லையா? இவ்வளவுக்கும் அங்கு நடந்தது இந்திரா காந்தியின் ஆட்சி!

(4-ம் பக்கம் பார்க்க)

# 'எதிர்க்கட்சியின் தரத்தைபொறுத்தே ஆட்சியின் தரம் இருக்கும்'

## 'ஆண்டு அனுபவம் பெற்றவர்கள் நாட்டின் தரத்தை உயர்த்த முயலவேண்டும்'

### பதவி விலகும் மேலவை உறுப்பினர்களைப் பாராட்டி அண்ணு உரை

சென்னை, ஏப். 2—

"ஓர் அரசின் தரம், ஆளும் கட்சியின் தரத்தைப் பொறுத்ததல்ல; எதிர்க் கட்சியின் தரத்தைப் பொறுத்தே உயருகிறது!

"'ஆளும் கட்சியின் தரம் குறைவாக இருக்கிறதே' என்று எதிர்க் கட்சியினர் கீழே செல்ல—'எதிர்க் கட்சியினர் தரம் குறைகிறதே' என்று ஆளும் கட்சியினர் கீழே செல்ல—என்ன ஆகும் -- பொதுவாக, நாட்டின் தரம் குறையும்!

"இன்று எதிர்க் கட்சியாக இருப்பவர்கள், இருபதாண்டுக் காலம் ஆண்ட பயிற்சியையும் பக்குவத்தையும் கொண்டவர்கள்; ஆகவே அவர்கள், நாட்டின் தரத்தை உயர்த்துவதற்கு முயலவேண்டும் -- முன்வர வேண்டும்"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவி முடிந்து விலகும் உறுப்பினர்களைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

மேலவையில், அண்ணு அவர்கள், பதவி விலகும் ஒவ்வொருவரையும் குறிப்பிட்டுப் பேசியதாவது :—

"சட்டமன்றம் இருக்கும்போது மேலவை எதற்காக' என்பது பற்றி நான் ஒரு புத்தகத்தில் படித்தது இப்போது நினைவிற்கு வருகிறது.

காப்பி குடிப்பதற்காக குவளை இருக்கும்போது, 'சாசர்' ஏன் தேவைப்படுகிறது?—காப்பி சூடாக—கொதிப்பேறி இருந்தால், ஊற்றி ஆற்றுவதற்காக!

காப்பி குடிக்கும்போது தவறி விழுந்தால் ஆடையில் படாமல் இருப்பதற்காக! அதுபோலத்தான், கொதிப்பேறிய விவரங்களைப் பற்றி ஆரஅமர ஆராயவும், சமாதானப்படுத்தவும் மேலவை பயன்படுகிறது; இந்தக் கருத்தை, நான், 'மேலவை இருக்கக்கூடாது' என்ற கருத்து இருந்தபோது படித்தேன்! இன்று அந்த மேலவையின் தயவில்தான் அமைச்சராக இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார் (காங்.) முதலாளிகளின் சார்பில் பேசுவதாகக் குறிப்பிட்டார். ஆனுல், நெசவாளர்கள் பற்றியும் பேசியிருக்கிருர்; அதோடு அவர், நெசவாளர் குடும்பத்தைச் சார்ந்தவர்.

நெசவாளர் குடும்பத்தில் பிறந்த யாரும் பொறுமை இழக்கமாட்டார்கள்! நூல் அறுகிறது—ஒட்டவைக்கிருர்கள் பொறுமையாக! 'சிக்கல்'களைத் தீர்க்கிருர்கள் பொறுமையாக! அத்தகைய கீர்த்திமிக்க குடும்பத்தைச் சார்ந்த அவர், பொறுமையாய் இருப்பதில் ஆச்சரியமில்லை!

திரு. சாம்பசிவ ரெட்டியார் கிராமங்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பவர்; தீந்தமிழில் அக்கருத்தைச் சொல்லுபவர்.

திரு. எஸ். டி. சுந்தரம் அவர்கள், கலைத் துறையில் ஈடுபட்டவர்; கலைத் துறையின் பிரதிநிதியாக இருந்து தனிச் சிறப்புடன் பணியாற்றினுர்.

திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள், கீர்த்திமிக்க விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்; விவசாயத்தைப் பற்றி நம்மைவிட அறிந்திருப்பவர்; அத்தகையவரின் நல்லுரைகளை நாம் என்றும் எதிர்பார்க்கிருேம்.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள், இந்த அவையிலிருந்தாலும் எந்த அவையிலிருந்தாலும், அவரது அருங்குணங்களை அனைவரும் பாராட்டுவர்.

நான் 1957-ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினருக இருந்தபோது, மேலவையில் அவர் பேசுகிருர் என்ருல்; நானே ஆவலுடன் வந்து கேட்பேன்.

எதுவும் தெரியாதவர்போல் அவர் எழுந்து நிற்பார்; யாருக்கும் தெரியாத புதுக்கருத்தைக் கூறுவார்; 'எல்லாம் தெரியும்' என்ற நினைப்பில்லாமல் எல்லாம் அறிந்தவர் அவர்!

**சிலர் 'எல்லாம் எனக்குத் தெரியும்' என்று நினைப்பார்கள்; 'ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டும்' என்ற நினைப்பே அவர்களுக்கு இருக்காது!**

**சிலர், எதுவுமே 'தெரியாது' என்று கூறுவார்கள்; அனைத்தும் அறிந்திருப்பார்கள்!**

**சிலர், அறிந்ததைச் சொல்லமுடியாமல் திணறுவார்கள்; ஆனுல் அவர்கள், அறிந்ததைத் தெளிவாகச் சிந்திக்கத்தக்க வகையில் கூறுவார்கள்!**

**மற்றவரின் நெஞ்சுக்குள் புகும்படி கருத்துக்களைச் சொல்லுவதென்பது கடினம்! அதிலும், பிறரைச் சிந்திக்க வைக்கும் கருத்தை சொல்லுவதென்பது மிகக் கடினம்!**

நான் கீழவையின் உறுப்பினராக இருந்தபோது, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி ஆராய்ந்த குழுவிடம், 'நமக்கு ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும்' என்று சொன்னேன்; 'ஆயிரம் கோடியா? எங்கிருந்து கொடுப்பது?' என்று சிலர் கேட்டார்கள்; எப்படி, அதைச் செலவழிப்பீர்கள்' என்றும் கேட்டனர்; அப்போது, திரு. கே. பாலசுப்பிரமணியம், இந்த அவையில், அந்தக் கேள்விகளுக்குப் பதில் கூறினுர்கள்;—'ஆயிரம் கோடி ரூபாயை எங்கிருந்து எடுப்பது' என்று கேட்டால், நான் வழி சொல்லுகிறேன்—'ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எங்கிருந்து பணம் எடுத்தீர்களோ அங்கிருந்து இதற்குப் பணம் எடுங்கள்' என்று!

'எப்படிச் செலவழிப்பது' என்பதற்கும் பதில் கூறுகிறேன்;—'ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எப்படிச் செலவு செய்கிறீர்களோ அப்படிச் செலவிடுங்கள்' என்று!

அந்தப் பதிலைக் கேட்டதும், நான் மெய்சிலிர்த்துப்போனேன்!

எளிதான முறையில் பதில் இருந்தாலும், மிகப் பெரிய பொருளாதாரத் தத்துவம் அதில் அடங்கியிருந்தது!

அத்தகைய அவர், மீண்டும் இந்த அவையில் அங்கம் வகிப்பதை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிருேம்.

தேசியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம், தமது கவிதை ஆற்றலினுல் தமிழ்நாட்டிற்கும்—தமிழ்நாட்டின்மூலம் கவிதை உலகிற்கும் பெருமை தேடித் தந்தவர். கவிதை யாப்பதோடு சுதந்தரப் போரிலும் பங்குபெற்றவர்; தேசியத் தொண்டும் புரிந்தவர்; அத்தகைய சிறப்பினுலும், தனது இனிய இயல்பினுலும் பல்லாயிரம் மக்களின் உள்ளங்களில் இடம்பெற்றவர்!

திரு. இராஜா அய்யர் அவர்கள், 'ஆசிரியர் சமூகத்திற்கும் இப்படி ஒரு பிரதிநிதி இனிக் கிடைக்கமாட்டார்' எனும்வகையில் பணிபுரிந்தவர்!

காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த திரு. இராமதாஸ், வயது காரணமாகக் கொஞ்சம் துடிப்பாகப் பேசுகிருர்; இந்த வயதில் இப்படிப் பேசாமல் எந்த வயதில் பேசுவது? 25 ஆண்டுகளாக அவர் காங்கிரசுக் கட்சியிலேயே இருந்துவருவதற்காகப் பாராட்டு; ஒரே கட்சியில் தொடர்ந்து இருப்பது என்பது அவ்வளவு அபூர்வமாகிவிட்டது இன்று! 'இன்றைக்கு இருப்பார் நாளைக்கிருப்பாரோ' என்று அஞ்சத்தகும் வகையில், அரசியல் பிடிப்புகள் கேவலமாகி வரும் வேளையில், ஒரே கட்சியில் இருப்பது பாராட்டத்தக்கதாகும், அவருக்கு—அவரது கட்சியில் இருக்கும் ஆர்வத்திற்குப் பாராட்டு!

எதற்குக் கட்சியில் இருக்கிருேம்: எத்தனை நாள் இருப்போம்; என்பதை அறியாமல் இருக்கக்கூடாது; ஆனுல், 'நமக்கு, கட்சியிலிருக்கும் அதே ஆர்வமும் பிடிப்பும் தியாக உணர்வும், மற்றவர்களுக்கும் இருக்கிறது' என நம்பி, சனநாயக உணர்வை வளர்க்க வேண்டும்.

அந்த முறையில் 'தமிழகத்தில் சனநாயகத்தை வெற்றி பெறச் செய்து விட்டோம்' என்ருல், இந்தியா முழுமைக்கும் வழிகாட்டியவர்களாக இருப்போம்!

திரு. இராஜாராம் நாயுடு அவர்கள், பல ஆண்டுகள் அமைச்சராகவும் அவையின் உறுப்பினராகவும் இருந்திருக்கிருர்; கிராமங்கள் முன்னேறவேண்டும்; கிராம சுயஆட்சி கிட்டவேண்டும் என்கிற ஒரு நோக்கத்தைக் கொண்டவர்.

**கிராமப் பிரச்சினை தீராமல் நாட்டுப் பிரச்சினை தீராது! கிராம மக்கள் வலிவு பெருமல் நாடு வலிவு பெருது — கிராமத்தில் செல்வம் சேராமல் நாட்டில் செல்வம் கொழிக்காது--கிராமத்தில் அரசியல் தெளிவு கிட்டாமல் நாட்டில் அரசியல் தெளிவு ஏற்படாது.**

கடந்த 25-ம் நாளிலிருந்து நிகழ்ச்சிகள் தொடர் தொடராக ஏற்பட்டபோது, நான் அழைத்த நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ஒத்துழைக்க வந்தார். என் அளவுக்கு இல்லாவிடினும் அவரும் கலக்கமடைந்தார்! நான் இந்த நிகழ்ச்சி பற்றித் தந்த விவரத்தை அவர் ஏற்றுக்கொண்டு. மேலும் சில விவரங்களைக்கேட்டு கட்சியின் மாண்பை நிலை நாட்டினுர்!

மற்றும் விலகிச் செல்லும் உறுப்பினர்கள், நற்பணியாற்றியுள்ளனர். அவையிலிருந்து அவர்கள் சென்ருலும், எங்கள் உள்ளத்திலிருந்து செல்லவில்லை; சட்டமன்ற வரலாற்றிலிருந்து செல்லவில்லை! நல்லுரை—அறிவுரைதரும் பணியிலிருந்து விலகவில்லை என்பேன்."

## சேலம் நகராட்சி மன்றம்

### கழக உறுப்பினர் தீர்மானம் நிறைவேறியது

28—3—68-ல் சேலம் நகராட்சி மன்றக் கூட்டம், தலைவர் திரு. ஆர். இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, பாவடி நகரமன்றத் துவக்கப் பள்ளியில் நர்சரி பள்ளிக்கூடம் (குழந்தைகள் பள்ளி) ஏற்படுத்துவதென்றும், அதற்குத் தேவையான இடமும், விளையாட்டுச் சாமான்களும் வழங்க வேண்டுமெனவும், மேற்படி பள்ளியில் பணியாற்றும் ஆயாவை (கண்டக்டர்ஸ்) நர்சரி பள்ளியின் வேலைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளவும் அனுமதி கேட்டுவந்துள்ள நகராட்சி உறுப்பினர் பி. எஸ். மாணிக்கம் அவர்களின் 13–2–68ந் தேதிய கடிதமும் அதன்பேரில் அலுவலகக் குறிப்பும் மன்றத்தில் வைக்கப்பட்டன.

முடிவில், பி. எஸ். மாணிக்கம் கொண்டுவந்த தீர்மானத்திற்கிணங்க நர்சரி பள்ளிக்கூடம் திறகலாமென ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

## இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியால் ஏற்பட்ட இழப்பு

### அஞ்சல் துறைக்கு அதிகச் சேதமில்லை

### மேலவையில் முதலமைச்சர் அண்ணு விளக்கம்

சென்னை, ஏப். 1—

"1967-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்த இந்தி எதிர்ப்பின்போது வன்முறைச் செயல்களினுல் இரயில்வேக்கு ரூ. 13.20 இலட்சம் இழப்பு ஏற்பட்டது"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"சென்னை மத்திய இரயில்நிலையம் எழும்பூர், பெரம்பூர், சைதாப்பேட்டை, மாம்பலம், திருநின்றவூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம், காராமணிகுப்பம், மதுரை ஜங்ஷன், மணப்பாறை, அரியலூர், தூத்துக்குடி, கோவில்பட்டி, வீரபாண்டியன்பட்டணம், சங்கரன்கோவில், கடையநல்லூர், இராஜமடம், திருவண்ணுமலை ஆகிய இரயில் நிலையங்களில் வன்முறைச் செயல்கள் நடைபெற்றன; இந்த வன்முறைச் செயலினுல் அஞ்சல் துறைக்கு ரூ. 607 மட்டுமே இழப்பு ஏற்பட்டது!

"1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் உயிரிழந்த இரு சப்-இன்ஸ்பெக்டர்களின் குடும்பங்களுக்கு 20,000 ரூபாயும், உயிரிழந்த ஒரு கான்ஸ்டபிளின் குடும்பத்திற்கு 10,000 ரூபாயும் ஈடு இழப்பு அளிக்கப்பட்டது; அந்தக் குடும்பங்களுக்கு, சட்ட விதிகளின்படி கிடைக்கக்கூடிய பென்ஷன், கிராசுட்டி முதலானவை இந்த இழப்பு ஈட்டுத் தொகையில் இணைக்கப்படவில்லை"

என்றும், ஒரு கேள்விக்கு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் அண்ணு அவர்கள் தெரிவித்துள்ளார்.

## இலங்கையிலிருந்து திரும்புவோருக்குக் கல்விச் சலுகை

வேலூர், ஏப் 4—

"இலங்கையிலிருந்து திரும்பும் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கு, பர்மாவிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கு தரப்படுவதைப் போன்று அவர்களுக்கும் கல்விச் சலுகைகளை அளிக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; தனியார் கல்வி நிலையமாயினும் சரி—அரசு கல்வி நிலையமாயினும் சரி—அனைத்திலும் இச்சலுகைகள் கிடைக்கும்"

என்று, செய்திக் குறிப்பு ஒன்றில், மாவட்டக் கலெக்டரின் உதவியாளர் தெரிவித்திருக்கிருர்.

## கோவை மாவட்ட தி.மா.மு. கழகம்

கோவை மாவட்ட தி.மா.மு.க. நிர்வாகிகள் வருமாறு:—

அவைத் தலைவர்: சிவஞான பாண்டியன் (விவசாயக் கல்லூரி).

துணைத் தலைவர்: சி. குருநாதன் (அரசினர் கலைக் கல்லூரி).

அமைப்புச் செயலாளர்: திருப்பூர் அரங்கநாதன்.

செயலாளர்: ஆ. துரைக்கண்ணு (சென்னைப் பல்கலைக் கழகம்).

துணைச் செயலாளர்: ந. சேதுநாதன் (அரசினர் கலைக் கல்லூரி).

பொருளாளர்: பொ. ந. சு. செயபால் (பு சா.கோ. கலைக் கல்லூரி).

செயற்குழு உறுப்பினர்கள்:— சௌந்தரபாண்டியன் (விவசாயக் கல்லூரி); செழியன் (விவசாயக் கல்லூரி); கோபாலகிருட்டினன் (அரசினர் கலைக் கல்லூரி); கலீல் (அரசினர் கலைக் கல்லூரி); பசுபதி, ஜம்புலிங்கம் (பு.சா.கோ. கலைக் கல்லூரி); மணிமொழி, சுப்பிரமணியன் (பு.சா.கோ. பொறியியற் கல்லூரி); வேலன், இராதாகிருட்டினன் (பேரூர் தமிழ்க் கல்லூரி); கிருட்டினன் (அரசினர் பொறியியற் கல்லூரி); ஆனந்தன் (அரசினர் தொழிற் கல்லூரி); ரகுநான் (கோவை தொழில் நுட்பக் கல்லூரி).

"தி.மா.மு. கழகத்தில் உறுப்பினராகச் சேர விரும்பும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி–கலை – பொறியியல் – தொழிற் கல்விக்கூட மாணவர்கள், கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்"

என்று, கோவை—நீலகிரி—சேலம்—தர்மபுரி தி.மா.மு.க. பொறுப்பாளர் என். ஆர். நடராசன் அறிவிக்கிருர்.

முகவரி:— ஆ. துரைக்கண்ணு, 1, பூங்கா வீதி, உப்பிலிபாளையம், கோவை-15.

என். ஆர். நடராசன், அண்ணு மன்றம், மதுக்கரை (கோவை வட்டம்).

## தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தல்

### வாக்காளர்களுக்கு வசதிகள்

சென்னை, ஏப். 4—

சென்னை கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி—சென்னை மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி ஆகியவற்றுக்கான தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தல், ஏப்ரல் 8-ம் நாள் காலை 8-மணி முதல் மாலை 5-மணி வரையில் நடைபெறும்.

இவ்விரு தொகுதிகளும், தஞ்சாவூர்—திருச்சிராப்பள்ளி — சேலம்—கோயம்புத்தூர்—தர்மபுரி — நீலகிரி ஆகிய மாவட்டங்களைக் கொண்டதாகும்.

எனவே, இந்த ஆறு மாவட்டங்களிலும் தேர்தல் நடைபெறும்.

வாக்காளர்கள் தத்தமது வாக்குச்சாவடிக்கு நேராகச் சென்று வாக்குப் பதிவு செய்யவேண்டும்.

எனவே, இம்மாவட்டத்தில் உள்ள மாநில அரசு அலுவலகங்களில் பணியாற்றும் வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்வதற்கு வசதியாக வாக்குப் பதிவு நாளன்று காலையில் இரண்டு மணி நேரம் அலுவலகத்துக்குத் தாமதமாக வரவோ, அல்லது அலுவலக நேரத்தில் இரண்டு மணி நேரம் அனுமதி பெற்றுச் சென்று வாக்குப் பதிவு செய்துவிட்டு வரவோ அரசு அனுமதித்துள்ளது.

இம்மாவட்டங்களில் உள்ள எல்லா மத்திய அரசாங்க அலுவலகங்கள்—தனியார் நிறுவனங்கள்—பாங்கிகள்—இதர நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை செய்யும் பட்டதாரிகளுள் மேற்படி தொகுதிகளின் வாக்காளர்களாக இருப்பவர்கள், ஏப்ரல் 8-ம் நாளன்று தத்தமது வாக்குகளைப் பதிவு செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரும்படி அந்தந்த நிறுவனங்களின் நிர்வாகிகளை அரசு கேட்டுக்கொள்கிறது.

# சீனவும் பாகிஸ்தானும் விழுங்கியுள்ள நிலப் பகுதி

## பட்டியல் தருகிறார் தலைமையமைச்சர்

### எல்லை நிர்ணயத்துக்கு இந்தியாவின் நிபந்தனை

புதுடில்லி, ஏப். 4—
"லடாக்கில் செஞ்சீனத்தின் ஆக்கிரமிப்பு நீங்கினாலன்றி—இந்தியப் பிரதேசங்களில் நடுப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் உரிமை கொண்டாடுவதை கைவிட்டாலன்றி—இந்தியாவுக்கும்—சீனவுக்குமிடையில் எல்லையை நிர்ணயிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி மக்களவையில் தெரிவித்தார்.

பாகிஸ்தான்—இந்தியா தகராறிலும், இந்தியா—செஞ்சீன தகராறிலும் இந்தியாவின் எல்லை எந்த அளவுக்குச் சிக்கியிருக்கிறது என்பதையும் தலைமையமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்தியா—பாகிஸ்தான் எல்லையில் தகராறிலுள்ள பகுதிகளின் அளவு வருமாறு:—

அசாம்—கிழக்குப் பாகிஸ்தான்: 7 மைல்; திரிபுரா — கிழக்குப் பாகிஸ்தான்: 48 மைல்.

வடக்கு எல்லையின் மேற்குப் பகுதியில் இந்தியா—சீன எல்லையில் இந்தியாவின் பகுதியில் சுமார் 14,500 சதுரமைல் தன்னுடையது என்று சீன அரசாங்கம் உரிமை கொண்டாடுகிறது.

இந்தியா—சீன எல்லையில் நடுப் பகுதியில், இந்திய மண்ணில் சுமார் 1,000 சதுரமைல் தன்னுடையதென்று சீன அரசாங்கம் உரிமை கொண்டாடுகிறது.

கிழக்குப் பகுதியில், இமாலயத்தின் அடிவாரம் வரையில் உள்ள இந்தியப் பிரதேசமான 'நேபா' பகுதி முழுவதையும், 'சீனப் பிரதேசம்' என்று சீன அரசாங்கம் உரிமை கொண்டாடுகிறது.

# இதுவரையில் 3.76 இலட்சம் டன்

## அரிசிக் கொள்முதலில் தமிழக அரசு சாதனை

"தமிழக அரசு இதுவரையில் 3.76-இலட்சம் டன் அரிசிக் கொள்முதல் செய்திருக்கிறது"

என உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மே மாதத்திற்குள் 5-இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய வேண்டும் என்று அரசு திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் திட்ட இலக்குக்கு மேலான சம்பா அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் அதிகப்படியாக 5,000 டன் அரிசிக் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# ஆயுள் காப்பீட்டு ஊழியர்கள் அறப்போர்

## நாளை 40,000 பேர் வேலை நிறுத்தம்

ஐதராபாத், ஏப் 4—
மின் கணக்கீட்டு இயந்திரத் திணிப்புத் திட்டத்தை எதிர்த்து ஆயுள் இன்சூரன்சு நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 40,000 ஊழியர்கள் ஏப்ரல் 5-ம் நாளன்று வேலை நிறுத்தம் செய்வர்.

ஏற்கனவே அவர்கள், கடந்த ஜூன் திங்களிலும், பிப்ரவரித் திங்களிலும் அடையாள வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர்.

"இந்தத் திட்டம் கைவிடப்பட்டாலன்றி, அண்மைக் காலத்திலேயே கால வரையறையின்றி வேலை நிறுத்தம் நடைபெறும்" என்று ஐதராபாத் குழு, அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

# பஞ்சாப் மாநில நிதி நிலை அறிக்கை

## 'செல்லத் தக்கதல்ல' என அறிவிக்குமாறு கோரிக்கை

### உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனுக்கள் தாக்கல்

சண்டிகார், ஏப் 2—
"பஞ்சாப் மாநில நிதிநிலை அறிக்கை நிறைவேற்றப்பட்டிருப்பது, 'அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல' எனத் தீர்ப்புக் கூறவேண்டும்"

எனக் கோரி பஞ்சாப் உயர் நீதிமன்றத்தில் இரண்டு 'ரிட்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த ரிட் மனுக்களை, பஞ்சாப்—அரியானு உயர் நீதிமன்ற விசேட பெஞ்சு, விசாரணைக்கு அனுமதித்து இருக்கிறது.

பஞ்சாப் ஐக்கிய முன்னணியைச் சார்ந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த 'ரிட்' மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

# அமைச்சர் என்பவர் யார்? எப்படி?

## ஆர். கே. பிர்லாவின் புதிய அகராதி!

'வெற்றிகர'மான அமைச்சராக இருப்பது எப்படி?—என்ற கேள்வியை எழுப்பி, அதற்கான விளக்கத்தினையும் மக்களவையில், சுதந்தராக் கட்சி உறுப்பினர் ஆர். கே. பிர்லா தந்திருக்கிறார்!

"யாருமே புரிந்துகொள்ள முடியாத வகையில் பேசுவது தான் எப்போதும் ஒரு அமைச்சருக்கு வெற்றியைத் தேடித் தரும்! அத்துடன், 'அமைச்சர்' என்பவர், 'தம்மைத்தானே புகழ்ந்து பேசிக் கொள்வது எப்படி' என்பதனையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்."

ஆர். கே. பிர்லா இவ்வாறு கூறியபோது, அமைச்சர் தினேஷ் சிங் உட்பட மக்களவை முழுவதும் சிரிப்பொலியில் ஆழ்ந்தது!

## நாயக் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை

பம்பாய், ஏப் 4—
மகாராட்டிர மாநில முதலமைச்சர் வி. வி. நாயக் அமைச்சரவையின்மீது, சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இத்தீர்மானம், மகாராட்டிர சட்டமன்றத்தில் ஏப்ரல் 9, 10—தேதிகளில் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

# நெடுஞ்செழியன் கருத்துரை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கேலி பேசும் கோமான்களே—சீமான்களே! இதற்கெல்லாம் என்ன சொல்லுகிறீர்கள்?

காந்தியார் பகல் 4-மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்டாரே—அவர் உயிர் காப்பாற்றப்பட்டதா? காப்பாற்றும் திறமை இருந்ததா?

அது போகட்டும்; நேற்று நடந்ததே—டில்லியில் தலைமை நீதிமன்ற நீதிபதியைப் பட்டப் பகலில் நீதிமன்றத்திற்குள்ளாகவே அவர் பணி புரிந்துகொண்டிருக்கும்போது கத்தியால் குத்தியிருக்கிறானே!

ஆனால், இங்கு வந்து பேசுகிறாயே—'சட்டம் ஒழுங்கு இல்லை' என்று!

திரு. சுப்பிரமணியமே சொன்னாரே—'கலவரம் நடந்தது; என் மீது கல் விழவில்லை' என்று!

## காவல் துறையினர் ஆற்றிய அரும் பணி

இந்த ஆண்டில் காவல் துறையினர் சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு ஆற்றிய அரும் பணி, பெரும் புகழுக்குரியதாகும்.

சென்னையில் சனவரித் திங்களில் உலகத் தமிழ் மாநாடு நடந்தது; அதனையொட்டி நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்தில் 10-இலட்சம் பேர் கலந்துகொண்டனர்; ஊர்வலத்துக்குப் பிறகு தினம் தினம் இரவு 2-மணிவரையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன; ஆடவர்-பெண்டிர்-குழந்தைகள் கலந்து கொண்டனர்; ஒரு சிறு அசம்பாவிதம் நடந்ததா? ஒரு கார் மற்றொரு கார் மீது மோதியதுண்டா? காவல் துறையினர் அந்த அளவுக்குப் பாடுபட்டனர்!

அது முடிந்த மறுநாளே ஒலிம்பிக் விளையாட்டுப் பந்தயங்கள் நடைபெற்றன; அதிலும் இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்; 6-நாட்கள் நடைபெற்றன; அதிலும் காவல் துறையினர் ஆற்றிய அரும் பணியை அனைவரும் பாராட்டி விட்டுத்தான் சென்றனர்!

அண்மையில் மகாமகம் குடந்தையில் நடைபெற்றது; 20 இலட்சம் பேர் கலந்துகொண்டனர்; இதற்கு முன்னால் நடந்த மகாமகம் எப்படியெல்லாம்நடந்தது? இந்த மகாமகத்தில் ஒரு சிறு நிகழ்ச்சி உண்டா?

வடநாட்டில் நடக்கும் கும்பமேளாவில், 'கை முறிந்தது--கால் முறிந்தது' என்றெல்லாம் நிகழ்ச்சிகள் நடக்கவில்லையா? அந்த நிகழ்ச்சி ஒன்றுகூட இங்கு நடக்கவில்லையே! இந்த அரசைப் பார்த்தா, 'சட்டம் இல்லை—அமைதி இல்லை' என்று கேட்பது?

## உரிமை அளித்தோம்-- காரணமும் உண்டு!

கறுப்புக் கொடி காட்டவும் நாங்கள் உரிமை அளித்திருக்கிறோம்! காங்கிரசு ஆட்சியில் நாங்கள் கறுப்புக் கொடி காட்ட முடிவு செய்தால், எங்களையெல்லாம் கைது செய்து விடுவார்களே—அதற்கும் உரிமை அளிக்கவில்லையே!

காங்கிரசுக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டுவதற்கு நாங்கள் ஏன் பயப்பட வேண்டும்? கறுப்பு எங்கள் கொடியில் பாதி இருக்கிறதே!

இதில் ஒரு வியப்பு என்னவென்றால், எங்கள் கொடியின் கலர் அவர்கள் கைகளில்! அவர்கள் கொடியின் கலர், எங்கள் கார்களில் பறக்கும் தேசியக் கொடியில் இருப்பதாகும்!

அந்தக் காலத்திலே தோழர் என். வி. நடராசன் அவர்கள், அண்ணாவை எதிர்த்து மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டி போடும்போது, 'இவர்கள் நெஞ்சிலே இருக்கிற மஞ்சாச் சோற்றை எடுத்து விடுவேன்' என்றெல்லாம் பேசினவர்தான்; அவர்தான் இப்போது கழகத்தின் அமைப்புச் செயலாளர்! ஆகவே, கறுப்புக்கொடி காட்டும் தோழர்களும் ஒரு காலத்திலே எங்களிடம் வரத்தான் போகிறார்கள்!"

கூட்டத்தில் வழக்குரைஞர் மாணிக்கவாசகம், நடராசன், தோழியர் கிரேஸ் சேவியர் ஆகியோரும் பேசினர்.

# மத்திய அரசுத் தொழிற்சாலையில் கதவடைப்பு

## தொழிலாளர் வேலை நிறுத்த எதிரொலி

பெங்களூர், ஏப். 3—
அரசுத் துறையைச் சார்ந்த பெங்களூர் டிவிஷன் இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

இன்று காலை 6-30 மணி முதல் இத்தொழிற்சாலை மூடப்பட்டது.

"இன்றியமையாப் பிரிவைச் சார்ந்த அனைவரும் இக்கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கும் நேரத்திலும் வேலைக்கு வரவேண்டும்" என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைச் செய்தியின் மூலம் தெரிகிறது.

மார்ச் 25 முதல் துவங்கிய சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து இக்கதவடைப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிர்வாகத் தரப்பில் கூறப்படுகிறது.

கதவடைப்பின்போது சம்பளம் மத்திய அரசுக்கு ஈடாக பஞ்சப்படி, தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவது குறித்த பிரச்சினை நீதிமன்றத்திற்கு அனுப்புவது போன்ற கோரிக்கைகள் ஏற்கப்படும் வரை தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது எனத் தொழிலாளர் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# கேரள அரசின் முயற்சி தோல்வி

## தொழில் தகராறில் தீர்வு காண இயலாத நிலை

கோழிக்கோடு, ஏப். 3—
மாவூரிலுள்ள குவாலியர் ரேயான் தொழிற்சாலையில் நடைபெற்று வரும் வேலை நிறுத்தத்தை முடிவுறச் செய்ய இங்கு நடைபெற்ற முக்கூட்டுப் பேச்சு வார்த்தை, தோல்வியில் முடிந்திருக்கிறது.

முதலமைச்சர் நம்பூதிரிபாடு, தொழிலாளர் அமைச்சர் மஞ்சுரான், தொழிலாளர் கமிஷனர் ஆகியோர், தொழிலாளர் பிரதிநிதிகளிடமும், நிர்வாகத்தினிடமும், பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு பத்திரிகையாளரிடம் பேசிய தொழிலாளர் அமைச்சர் கூறியதாவது:

"பேச்சுவார்த்தை தோல்வியடைந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், கருத்து வேற்றுமை அதிகமாகிவிட்டிருக்கிறதா என்பதையும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஏனெனில், வேலை நிறுத்தத்திற்கு முன்னால், தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் பேச்சுவார்த்தை துவங்கி, சில முடிவுகளுக்கு வந்துவிட்டிருக்கின்றனர். அம்முடிவுகளை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தொழிலாளர் பிரதிநிதிகள் வற்புறுத்துகின்றனர். ஆனால் அம்முடிவுகள் என்ன என்பது எங்களுக்குத் தெரியாது. வேலை நிறுத்தத்திற்குப் பிறகு உள்ள நிலைமைகள் மட்டுமே எங்களுக்குத் தெரியும்."

# செங்கற்பட்டு

## வழக்கறிஞர்கள் கோரிக்கை

செங்கற்பட்டு, ஏப். 3—
"தமிழகச் சட்டமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்"

என்று இங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

"சட்டமன்ற மேலவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தும்போது, இக்கோரிக்கையை அரசு பரிசீலனை செய்ய வேண்டும்" என்ற யோசனையும் கூறப்பட்டிருக்கிறது.

பாலர் அரங்கம்
ஏப்ரல் 5, 6, 7 தேதிகளில்
மாலை 4-மணிக்கு
"டிக்கோவும் சுரு மீனும்"
(கடல் அடியில் மீன் வேட்டைக் காட்சிகள் நிறைந்தது)
கட்டணம் வழக்கம்போல்

# நடக்க இருப்பவை

## 5--4--68

**மணக்குடி**

தி. மு. க. 12-வது ஆண்டு விழா; மாலை 6-மணிக்கு கூத்தர் சதுக்கத்தில்; தலைவர்: கா. சம்பந்தமூர்த்தி; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி. எஸ். கஸ்தூரி பி.எஸ்.சி., பி.எல்., டி. எஸ். கல்யாணசுந்தரம், மா. மீனாட்சிசுந்தரம், செ. யூசுப், கோ. வைரக்கண்ணு, வே. கோதண்டபாணி, மற்றும் பலர்.

**முத்துப்பேட்டை**

அரு.மு. கணபதி நினைவு மன்றச்சார்பில் மாலை 6-30 மணிக்கு இரயில்வேத் திடலில்; தலைவர்: கோ. வீ. தியாகராசன்; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

## 6--4--68

**வேலாயுதம்பாளையம்**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு மலைவீதி கலைவாணர் திடலில்; தலைவர்: மொ. முத்துசாமி; பேசுவோர்: கேரள சுந்தரம், வை. இரத்தினவேலு, க. நாச்சிமுத்து, மற்றும் பலர்.

## வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

ஏப்ரல் 7: பெங்களூர்; 13: அவினாசிபாதை; 21: உடுமலைப் பேட்டை; 22: திருவண்ணாமலை; 23: மங்கைநல்லூர்; 24: தாத்தய்யங்கார்பேட்டை; 25: ஏனாதி; 26: இளங்கடம்பனூர்; 27: போடிநாயக்கனூர்; 28: சேத்தமங்கலம்; 29: சலகண்டபுரம்; 30: இடைப்பாடி.

மே 1: கோயம்புத்தூர்; 3: பார்த்திபனூர்; 10: லால்குடி.

# மேலவைத் தேர்தல்

## நீலகிரி வட்டச் செயலாளர் வேண்டுகோள்

நீலகிரி வட்ட தி. மு. க. செயலாளர் கோ. கருணாநிதன் எம். எல்.ஏ. அறிவிப்பதாவது:—

"கோவை—நீலகிரி—சேலம்—தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கான தமிழக மேலவை பட்டதாரிகள் தொகுதித் தேர்தல், 8—4—68-ல் நடைபெற இருப்பது தெரிந்ததே.

"இத் தொகுதியில் நீண்ட நாட்களாகக் கழக பேச்சாளராகவும், கோவையில் புகழ்மிக்க வழக்கறிஞராகவும், பலகாலமாகப் பொதுத்தொண்டில் ஈடுபாடு கொண்டவராகவும் இருந்துவரும் தோழர் அரங்கநாயகம் எம்.ஏ.பி.டி., பி.எல். அவர்கள், கழக வேட்பாளராகப் போட்டியிடவிருக்கிறார்.

"ஆகவே, பட்டதாரி நண்பர்கள் தங்கள் மேலான வாக்குகளை அன்புடன் அளித்து அரங்கநாயகம் அவர்களை ஆதரித்து வெற்றிபெறச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்; கழக அமைப்புகளும், நண்பர்களும், கழக வேட்பாளரின் வெற்றிக்காக உழைக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.